# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 139/2015

சாட்சி : PW– 1
பெயர் : திரு. ரமேஷ்                                        தேதி : 10.12.2024

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– (1ம் பிரதிவாதி தரப்பில்)

நானும் இந்த வழக்கில் உள்ள 2ம் பிரதிவாதியும் சேர்ந்து அ.வ.எண். 424/2015 என்ற வழக்கை சேலம் முதலாவது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தோம். அந்த வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு அ.வ.எண். 5/2017 என்ற புதிய எண் கொடுக்கப்பட்டுள்ளது. அ.வ.எண். 424/2015 என்ற வழக்கில் உள்ள 1ம் பிரதிவாதி தாவா சொத்து தனக்கு மட்டும் பாத்தியப்பட்டதாகவும், தன் அனுபவத்தில் உள்ளதாகவும் கூறி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார். 28.03.2008 தேதிய பாக பத்திரப்படி எனக்கும் 2, 3 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளேன்.

1ம் பிரதிவாதி எதிர் வழக்குரையில் தாவா சொத்து 09.02.1987 தேதிய கிரயப் பத்திரப்படி தனக்கு பாத்தியப்பட்டதாக கூறியுள்ளார். அ.வ.எண். 139/2015 வழக்கில் 09.02.1987 கிரய பத்திரம் செல்லாது என்று விளம்புகை செய்யக்கோரியும், எங்களது சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளேன். வேறு பரிகாரம் கேட்டுள்ளது பற்றி தற்பொழுது எனக்கு ஞாபகமில்லை.

முதல் பிரதிவாதி பாக பத்திரம் பொய்யானது எனக்கூறி அ.வ.எண். 656/2015 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். அ.வ.எண். 139/2015 என்ற வழக்கை தாக்கல் செய்த பிறகுதான் அ.வ.எண். 656/2015 என்ற வழக்கு தாக்கல்

செய்யப்பட்டது. அ.வ.எண். 656/2015 என்ற வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு அ.வ.எண். 6/2017 ஆக புதிய எண் கொடுக்கப்பட்டுள்ளது.

( 1ம் பிரதிவாதியின் தரப்பில் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.